IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.158/2020
DEPOSITION OF WITNESS (PW1)

வா.சா.1 சாட்சி கண்ணன் த.பெ.பால்ச்சாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 11.09.2024 in accordance with the provisions of Act XX141.**

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நானும், தெய்வபெருமாளும் சேர்ந்து தான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இருவரின் சொத்துக்களும் வேறு வேறு சொத்துக்கள் என்றால் சரியல்ல. எனக்கு பிளாட் எண் 59 பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 1ம்வாதிக்கு பிளாட் எண் 56 பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இரண்டு பிளாட்டுகளுக்கும் வெவ்வேறு நான்குமால் உள்ளது என்றால் சரிதான்.

2. பிளாட் எண் 56 ஆனது தெய்வபெருமாளுக்கு உரிமையானது என்றாலும், அதை பொறுத்து நான் உரிமைகோர இயலாது என்றாலும் சரிதான். வழக்குச் சொத்து அருகே மொத்தம் எத்தனை பிளாட் உள்ளது என்றால் 104 ஆகும். மொத்தம் 104 பிளாட்தான் உள்ளது என்பதற்கு ஆதரவாக ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். உண்மையில் 265 பிளாட்டுகள் உள்ளதை மறைத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல.

3. மேற்படி பிளாட் ஆனது எனக்கும், மற்றவர்களுக்கும் அரசால் இலவசமாக வழங்கப்பட்டது என்றால் சரிதான். ஒவ்வொரு பிளாட்டும் 1ஏர்ஸ்

என்றால் எனக்கு தெரியாது. எனக்கு கொடுத்த பிளாட்டை நான் அளந்து கல்ஊன்றினேனா என்றால் அளந்து கல்ஊன்றிதான் அரசாங்கத்தில் கொடுத்தார்கள். பின்னிட்டு நான் தன்னிச்சையாக எனது பிளாட்டை அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 பட்டாவில் உள்ள நிபந்தனைகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

4. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 பட்டா எனக்கு எவ்வாறு வந்தது என்றால் நாங்கள் இருவரும் சேர்ந்து தான் வழக்கு தாக்கல் செய்தோம். மேற்படி பட்டாவை நான் தாக்கல் செய்ய உரிமையில்லை என்றால் சரியல்ல. மேற்படி பட்டா தவிர தாவாச் சொத்தை அடையாளப்படுத்துவதற்கான புலவரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

5. எனக்கு வழங்கப்பட்டிருக்கும் பட்டாப்படி அளவுகள் தெரியுமா என்றால் தெரியாது. இடம் சதுரமாக உள்ளது. வா.சா.ஆ.2 பட்டாவில் எந்த அடியளவும் குறிப்பிடப்படவில்லை என்றால் அரசாங்கம் அப்படிதான் கொடுத்தது. எனது இடத்தின் அடியளவு எனக்கு தற்போதுவரை தெரியாது என்றால் சரிதான். வழக்குச் சொத்து தற்போதுவரை காலியிடமாகத்தான் உள்ளது என்றால் மண்வீடு இருந்தது இடிந்ததால் வழக்கு போட்ட பின்பு கட்டிடம் இல்லாமல் உள்ளது. வழக்குச் சொத்தில் எப்போதும் மண்வீடு இல்லை என்பதை மறைத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல.

6. மண்வீடு இல்லை என்பதால் வீட்வரி இரசீது எதுவும் வழங்கவில்லை என்றால் மண்வீடு இருந்தது. இரசீது வழங்கினார்கள். மேற்படி வீட்டுவரி இரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் மண்வீடு இடிந்துவிட்டதால் இரசீது அதோடு சேர்ந்து காணாமல்

போய்விட்டது. கிராம ஊராட்சியில் இருந்து வீட்டுவரி இரசீது நகலை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் நான் கேட்டதற்கு நகல் இரசீது இல்லை என்று கூறிவிட்டார்கள். வீடு இருந்ததாக சொல்வது பொய்யானது என்றால் வழக்கு போட்டபின்புதான் காலியிடமாக உள்ளது அதற்கு முன்பு வரை குடியிருந்தோம்.

7. பிளாட் எண் 56 காலியிடமாக உள்ளதா என்றால் ஆடுமாடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். உண்மையில் பிளாட் எண் 56-ம் காலியிடமாக உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பிளாட் எண் 56 சம்மந்தமாக நான் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரியல்ல. 1ம்வாதி தன்னுடைய சொத்து குறித்து வாய்மொழி சாட்சியம் அளிக்காததால் அவருக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

8.1ம் பிரதிவாதியின் அப்பாவிற்கும், என்னை போன்று பிளாட் எண் 47 வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பிளாட் 47-ஐ 1ம்பிரதிவாதியின் தந்தை இறந்த பிறகு கல்வேலி அமைத்து 1ம்பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் வேலி போடவில்லை. வழக்கிற்கு பின்பு 1ம்பிரதிவாதிதான் அனுபவம் செய்து வருகிறார். உண்மையில் பிளாட் எண் 47-ல் 1ம்பிரதிவாதி கல்வேலி அமைத்து அனுபவம் செய்து வருவதை நான் மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. நான் எனது பிளாட் 56 எங்குள்ளது என்பது தெரியாமல் 1ம்பிரதிவாதியின் பிளாட் 47க்கு சென்று இடைஞ்சல் செய்தேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு தாக்கல் செய்த பின்பு எனது இடத்தை அளக்க நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் ஏதாவது

மனு போட்டால் உண்மையில் இடம் எங்குள்ளது என்பது தெரியவரும் என்பதால் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்திற்கு காலியிட தீர்வை இரசீது செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை.

10.வா.சா.ஆ.2ஆவணத்தை மட்டும் வைத்து வழக்குச் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபணம் செய்யமுடியாது என்றாலும், வழக்குச் சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3, 4 பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை. எனவே நீதியின் நலன் பொருட்டு 3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.